சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி

SESSION CASE NO.106/2023

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாள் திங்கள்கிழமை

அ.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கஸ்தூரி | க/பெ.: | மாரிமுத்து |
| கிராமம்: | பாமனி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | இல்லம் தேடிகல்வி ஆசிரியார் |
| வயது: | 43 | முகவரி: | பாமனி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 16.12.2024

**முதல் விசாரணை :–**

நான் பாமனி கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா 1 எனது கணவர் ஆவார். இறந்து போன சந்தியா எனது மகள் ஆவார். 14.02.2022 ஆம் தேதி திங்கள் மாலை 04.10 மணிக்கு பள்ளி முடிந்துவிட்டு எனது மகள் சந்தியா வீட்டிற்கு வந்தாள். நான் மாலை 04.20 மணிக்கு வீட்டிலிருந்து தமிழக அரசு முதல்வரின் திட்டத்தின்படி இல்லம் தேடி கல்வி சொல்லி கொடுப்பதற்காக பாமனி பஞ்சாயத்து போர்டு அருகில் உள்ள அரசு பள்ளியில் மாணவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுப்பதற்காக சென்று விட்டேன். நான் பள்ளியில் மாணவர்களுக்கு வகுப்பு எடுப்பதற்காக இருந்தபோது கோமதியின் மகள் பவதாரணி என்பவர் என்னிடம் வந்து எனது மகள் சந்தியாவிற்கு நெஞ்சுவலி இருப்பதாக சொல்லி என்னை அழைத்துவந்தார். நான் வந்து பார்த்தபோது என்னுடைய மகள் சந்தியாவை நான் குடியிருந்து வாடகை வீட்டு திண்ணையில் போட்டு பாப்பாத்தி, செல்லமணி, ரதியம்மாள், சித்ரா, ஞானம்பாள், மகாலெட்சுமி, பவதாரணி, முத்து, பக்கிரிசாமி, முருகன் மற்றும் மாதவன் ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள். நான் அங்கிருந்த நபர்களிடம் விசாரித்தபோது எதிரி லோகேஷ் என்பவர் என் வீட்டிற்கு வந்து என் மகளிடம் சண்டை போட்டு கொண்டு எதிரி

வெளியே சென்றபோது என் மகள் கதவை சாத்திக்கொண்டு தூக்குமாட்டி கொண்டார் என சொன்னார்கள். என் மகள் எதற்காக தூக்குமாட்டிகொண்டார் என்றால் 14.02.2022 காதலர் தினம் என்பதால் என் மகளை வீட்டிலிருந்து வெளியே வரும்படி எதிரி அழைத்தார் என்றும் என் மகள் வீட்டிலிருந்து வெளியே வராததால் எதிரி என் மகளிடம் சண்டை போட்டதால் என் மகள் தூக்கு மாட்டிகொண்டார். பின்பு எனது கணவரிடம் யாரோ போன் செய்து சொன்னார்கள். பின்னர் எனது மகளை திருத்துறைப்பூண்டி அரசு பொது மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். என் மகள் இறந்துபோனதால் எனது மகளின் உடலை எங்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.106/2023**

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாள் திங்கள்கிழமை

அ.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மாரிமுத்து | த/பெ.: | சுப்ரமணியன் |
| கிராமம்: | பாமனி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | கூரை வேலை |
| வயது: | 42 | முகவரி: | பாமனி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 16.12.2024

**முதல் விசாரணை :–**

நான் கூரை வேலை செய்து வருகிறேன். திருத்துறைப்பூண்டி பாமனி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எதிரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எதிரி குடியிருந்து வரும் தெற்கு பாமனி பகுதியில் எதிரி வீட்டிற்கு எதிர்புறத்தில் குடியிருந்து வந்தேன். எனக்கு 1 மகன் சஞ்சய் மற்றும் 1 மகள் சந்தியா. எனது மகள் சந்தியா 11ம் வகுப்பு படித்து வந்தார். எனது மகன் சஞ்சய் தனியார் கம்பெனியில் பணியாற்றி வந்தார். ஆஜர் எதிரி யோகேஷ் என்பவர் எனது மகளிடம் காதலிக்குமாறு அடிக்கடி தொலைபேசி மூலமாக தொல்லை கொடுத்து வந்தார். இதனால் எனது குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் சண்டை ஏற்பட்டது. பின்னர் நான் அங்கிருந்து அதே கிராமத்தில் உள்ள பாரதியார் தெருவில் உள்ள ஒரு வாடகை வீட்டில் குடியிருந்து வந்தேன். 14.02.2022ல் நான் பட்டுகோட்டையில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அன்று மாலை 06.00 மணியளவில் எனது தம்பி சுரேஷ் என்பவர் போன் செய்து சந்தியா தூக்கு மாட்டிகொண்டார் என்றும், உடனடியாக வர சொன்னார். நான் பட்டுகோட்டையிலிருந்து திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது எனது மகள் இறந்து பிணவறையில்

வைக்கப்பட்டிருந்தார். நான் அடுத்த நாள் ஊரில் உள்ளவர்களிடம் விசாரித்தபோது எதிரி லோகேஷ் என்பவர் 14.02.2022ல் காதலர் தினம் என்பதால் எனது வீட்டுக்கு வந்து எனது மகளிடம் தொந்தரவு கொடுத்துள்ளார். அதனால்தான் எனது மகள் தற்கொலை செய்து கொண்டார். என் மகள் சாவிற்கு எதிரிதான் காரணம். 15.02.2022 அன்று திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார்** இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.